**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 30/2024**

Deposition of witness for **RW1** for **Respondent** and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Parameshwaran | Father Name | : | Rathinavel |
| Village | : | | Age | : | |

**நாள்:12.03.2026.**

**எ.ம.சா.1. முதல் விசாரணை :**

நான் **வட்டார போக்குவரத்து அலுவலகம்** ஒசூரில் **இளநிலை உதவியாளராக** பணிப்புரிந்து வருகிறேன். வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அவருக்கு மினி பேருந்து தொடர்பான வழித்தடம் ஆய்வு பணி இருப்பதால் அவர் எனக்கு சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கி உள்ளார். அந்த அனுமதி கடிதம் **சா.சா.ஆ.Y1** ஆகும். அழைப்பாணையில் கேட்டுள்ள கார்த்திக், த/பெ.கோவிந்தராஜ், க.எண்.343, பன்னக்கொல்லை கிராமம், தொட்டபூவத்தி, கிருஷ்ணகிரி தாலுக்கா என்வருக்கு எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்பது சா.சா.ஆ. Y1 ல் உள்ளது. TN 70 L 3163 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் உண்மை நகல் **சா.சா.ஆ.Y2** ஆகும். அந்த ஆய்வறிக்கையில் அந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்று CR வழங்கப்பட்டுள்ளது. TN 24 BC 5013 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் உண்மை நகல் **சா.சா.ஆ.Y3** ஆகும். TN 24 BC 5013 என்ற வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று CR வழங்கப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில்**

கார்த்திக், த/பெ.கோவிந்தராஜ், க.எண்.343, பன்னக்கொல்லை கிராமம், தொட்டபூவத்தி, கிருஷ்ணகிரி தாலுக்கா என்பவருடைய விலாசம் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலக எல்லைக்குள் வருகிறது என்றால் சரிதான். அவர் கிருஷ்ணகிரி வட்டா

போக்குவரத்து அலுவகத்தில் ஓட்டுநர் உரிமம் எடுத்திருந்தால் அது எங்கள் அலுவலகத்திற்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.